செய்தி வெளியீடு எண்: 860 நாள்: 05.10.2010

# அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்காகப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 98 நூலகர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதலமைச்சர் கலைஞர் வழங்கினார்!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் கனவுத் திட்டமாக அழகிய வடிவமைப்புடன் கட்டப்பட்டுள்ள "அண்ணா நூற்றாண்டு நூலகம்" 15.9.2010 அன்று திறந்து வைக்கப்பட்டுச் சிறப்போடு செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்திற்காக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் புதிதாக அனுமதித்துள்ள பணியிடங்களுள் 99 நூலகர் பணியிடங்கள், தமிழ்நாடு அரசின் ஆசிரியர் தேர்வு வாரியத்தின்மூலம் போட்டித் தேர்வுகள் முறையில் தேர்ந்தெடுக்கப்பட ஏற்கனவே ஆணையிடப்பட்டிருந்தது. அந்த ஆணையின்படி,

நூலகர் மற்றும் தகவல் அலுவலர்கள் 9 பேர்;

உதவி நூலகர் மற்றும் தகவல் அலுவலர்கள் 17 பேர்;

நூலகர் மற்றும் முதல் நிலை தகவல் உதவியாளர்கள் 36 பேர்;

நூலகர் மற்றும் இரண்டாம்நிலை தகவல் உதவியாளர்கள் 36 பேர்

– என மொத்தம் 98 பேர் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்த 98 நூலகர்களுக்கும் உரிய பணி நியமன ஆணைகளை வழங்குவதன் அடையாளமாகச் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் இன்று (5.10.2010) நடைபெற்ற நிகழ்ச்சியில் முதலமைச்சர் கலைஞர் 10 நூலகர்களுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கி வாழ்த்துகள் கூறினார்.

இந்நிகழ்வின்போது, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியத்தின் தலைவர் முனைவர் பி. இராமையா, பள்ளிக் கல்வித் துறைச் செயலாளர் திரு. தேவ ஜோதிஜெகராஜன், பொது நூலக இயக்குநர் திரு. க.அறிவொளி ஆகியோர் உடனிருந்தனர்.

வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9

* * *

* * *